# அண்ணா பல்கலைக்கழகம் :: சென்னை - 25

## தேர்வுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகம்

### நவம்பர்/டிசம்பர் 2021 தேர்வுகளுக்கான மாணவர்களுக்கான வழிமுறைகள்

**முக்கிய அறிவுறுத்தல்:**

மாணவர்களின் பதிவு எண், மாணவர்களின் பெயர், மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண், மற்றும் தேர்வு எழுத மாணவர்கள் பதிவு செய்த பாடங்களின் விவரங்கள் (வழக்கமான மற்றும் நிலுவையில் உள்ள பாடங்கள்) போன்ற விவரங்கள் அனைத்துக் கல்லூரிகளுக்கும் வழங்கப் பட்டுள்ளன. மாணவர்கள் இறுதியாகப் படித்த / படித்துக்கொண்டிருக்கின்ற கல்லூரிகளில், கூகுள் வகுப்பறைகள் / மைக்ரோசாப்ட் குழுக்கள் / மின்னஞ்சல் மூலமாக வினாத்தாளைப் பெறவும் மற்றும் விடைத்தாளின் மென் நகலைப் பதிவேற்றவும் ஏதேனுமொரு தளங்களில் வசதியை உருவாக்குமாறு கல்லூரி முதல்வர்களிடம் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. மூடப்பட்ட கல்லூரிகள்/தன்னாட்சிக் கல்லூரிகள் அல்லது நிலுவை பாடங்களைக் கொண்ட மாணவர்களை மட்டுமே கொண்ட கல்லூரிகளுக்கு, மைய மாற்றம் செய்யப்பட்டு, அத்தகைய மாணவர்களுக்கு, புதிதாக ஒதுக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் கூகுள் வகுப்பறைகள்/மைக்ரோசாப்ட் போன்ற தளங்களின் வழியாக வினாத்தாளைப் பெற வசதியை ஏற்படுத்தித் தருவார்கள். மற்றும் வினாத்தாளின் மென் நகலையும், அசல் விடைத்தாளையும் புதிய மையத்தின் முதல்வருக்கு அனுப்ப வேண்டும். எனவே, அனைத்து மாணவர்களும் கல்லூரிகளின் முதல்வர்களிடமிருந்து எந்த முறையில் வினாத்தாளைப் பெற வேண்டும் எனவும் மற்றும் விடைத்தாளின் மென் நகலின் பதிவேற்றத்திற்கு தேவையான விவரங்களை முன்கூட்டியே பெறுவார்கள். மாணவர்கள் விவரம் கிடைக்காவிட்டால், கல்லூரி முதல்வரை தொடர்பு கொண்டு விவரங்களைப் பெறலாம். ஒவ்வொரு கல்லூரியிலும் தொடர்பு கொள்ளவேண்டிய நபர்களின் விவரங்களைப்பெற, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தின் தரவுதளத்தின் மூலம் மாணவர் உள்நுழைவு வழியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுவான வழிமுறைகள்:

இந்த அறிவுறுத்தல்கள், நீங்கள் எழுதப்போகும் தேர்வின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்களைப் பற்றிய முக்கியமான வழிமுறைகள் உள்ளன.

- மாணவர்கள் தேர்வெழுத தேர்வு நுழைவுச்சீட்டு வழங்கப்படும். இந்தத்தேர்வு நுழைவுச்சீட்டை தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் அலுவலக வலைத்தளத்திலிருந்து கீழிறக்கம் செய்து கொள்ளலாம்.
- இத்தகைய தேர்வு நுழைவுச்சீட்டு பல்கலைக்கழகத்தால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் வழிமுறைகள் மற்றும் அறிவுரைகளைப் பின்பற்றி அமையும். மாணவர்கள் தேர்வு நுழைவுச்சீட்டில் காணப்படும் மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றவில்லையெனில் அவர்களின் தேர்வு ரத்து செய்யப்படும்.
- எல்லாத்தேர்வுகளையும் மாணவர்கள் அவர்கள் தங்கும் இடத்திலிருந்து எழுத வேண்டும்.
- தேர்வு நுழைவுச் சீட்டில் மாணவர்களின் பெயரிலோ, அவர்கள் எழுதும் பாடங்களிலோ தவறு இருக்குமாயின் அதனை உடனடியாகத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.
- தேர்வு எழுதும் முன் மாணவர்கள் தாங்கள் எழுதப்போகும் பாடத்திற்கான கேள்வித்தாளை பெற்றிருக்கிறோமா என உறுதி செய்து கொள்ள வேண்டும். அவர்கள் கேள்வித்தாளில் கொடுக்கப்பட்டிருக்கும் பாடத்திற்கான குறியீடு மற்றும் வரன்முறைகள் சரியாகக் குறியிடப்பட்டுள்ளதா எனவும் பார்த்துக் கொள்ளவேண்டும்.
- மாணவர்கள் விடைத்தாளில் எந்தப்பக்கத்தையும் வெறுமனே இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இருப்பின் அவற்றை எழுதுகோலால் அடித்திருக்க வேண்டும்.
- மாணவர்கள் விடைகளைத் தெளிவாக நீலம் / கருப்பு மையிலான எழுதுகோல் அல்லது நீலம் / கருப்பு மையிலான பந்துமுனை எழுதுகோலைப் பயன்படுத்தி எழுத வேண்டும்.
- விடைத்தாளில் பதிவு எண், பாடக்குறியீட்டு எண், இவற்றைத் தவறாக எழுதினால் அந்த விடைத் தாள்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும். அதே போல் தேர்வுக்குத்

தொடர்பற்ற ஏதேனும் தனிக்குறி, அல்லது எழுத்துகளை விடைத்தாளில் ஏதேனும் பக்கங்களில் எழுதியிருந்தால் அதுவும் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

- மாணவர்கள் தேர்வு எழுதும் பொழுது பல்கலைக்கழகம் நுழைவுச் சீட்டை சோதிக்க விரும்பினால் அதனை வழங்கவேண்டும்.

**தேர்வு முறை:-**

வீட்டிலிருந்து எழுதும் இந்தத் தேர்வு மூன்று மணி நேரம் நடைபெறும். தேர்வுக்கான கேள்வித்தாள்கள் முன்பு போல (கொரானா காலத்திற்கு முன்பு) அமையும்.

<u>பயன்பாட்டிற்குரிய கருவிகள்:-</u>

தேர்வு எழுதும் மாணவர்கள் மடிக்கணினி / மேசைக்கணினி / கைபேசி / வரை பட்டிகை இவற்றோடு தயார் நிலையில் இருக்க வேண்டும். இணையதளத்தின் மூலம் தங்களுக்கான கேள்வித் தாள்களை (தேர்விற்கு முன்னால்) கீழிறக்கம் செய்து கொள்ள வேண்டும். தேர்வு எழுதிய பின் தேர்வெழுதிய தாள்களைப் படமெடுத்து (கையடக்க ஆவண வடிவில்) பதிவேற்றம் செய்ய வேண்டும் (தேர்விற்குப் பின்னால்).

**தேர்வுக்குப் பயன்படுத்தும் எழுது பொருட்கள்:-**

மாணவர்கள் தங்களுக்குத் தேவையான துணியால் இழையப்பட்ட உறை (A4 அளவில் ஏற்கத்தக்க) நீலம் / கறுப்பு மை கொண்ட எழுதுகோல், கரிக்கோல், அழிப்பான், கூர்மையாக்கி, அளவுகோல், நூல், கோடில்லா வெற்று A4 வெள்ளைத்தாள், வரைப்படத்தாள், விளக்கப்படம் ஆகியவற்றை வாங்கி வைத்திருக்க வேண்டும். கணக்கிடும் கருவி மற்றும் ஏனைய கருவிகள் பொறியியல் படங்கள் வரைவதற்கும், ஓவிய அடிப்படையிலான தேர்வுகள் எழுதுவதற்கும் தேவையான கருவிகள், இணைப்புகளின் அச்சு நகல்கள், ஏனைய தேவையான எழுதுபொருள்கள் தேர்வு எழுதுவதற்கு முன்பே தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும்.

<u>**தேர்வெழுத கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்:-**</u>

- மாணவர்கள் தாங்கள் தங்கும் இடத்திலிருந்தே தேர்வு எழுத தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வுக்குரிய எழுது பொருள்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

- மாணவர்கள் தங்கள் கல்லூரியின் முதல்வரோடு கூகிள் வகுப்பறை / மென் நகல் குழு/ மின்னஞ்சல் அல்லது வேறு ஏதேனும் முறையில் தங்களின் கேள்வித்தாட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் ஒவ்வொரு தேர்விலும் இணைப்பு I-ஐ பூர்த்தி செய்து அதனை விடைத்தாளின் முதல் பக்கத்தில் வைத்திருக்க வேண்டும்.
- மாணவர்கள் இணைப்பு-I த் தவிர A4 அளவிலுள்ள விடைத்தாளில் இருபக்கமும் தங்களுடைய விடைகளை 30 பக்கத்திற்கு மேல் மிகாமல் (15 தாள்கள் ) எழுதலாம்.
- மாணவர்கள் தங்கள் விடைத்தாட்களை நூலால் கட்டியிருக்க வேண்டும்.
- மாணவர்கள் நீலம் / கருப்பு எழுதுகோலால் தேர்வு எழுத வேண்டும். அவர்கள் விடைகளை தட்டச்சு செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் தங்கள் பாடப்புத்தகங்களிருந்து நகல் எடுத்து அதன் நிழற்படங்களை விடைத்தாளில் ஒட்டுவதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது.
- பதிவு எண், மாணவரின் பெயர், பாடக்குறியீட்டு எண், பாடத்தின் பெயர் ஆகியவற்றை ஒவ்வொரு பக்கத்தின் மேற்புறத்தில் எழுத வேண்டும்.
- தேர்வு நடக்கும் நாள், பக்க எண், மாணவர்களின் கையொப்பம் ஆகியவற்றை ஒவ்வொரு பக்கத்தின் கீழே எழுதப்படவேண்டும்.
- மாணவர்கள் தங்களின் விடைத்தாட்களை படமெடுத்து கையடக்க ஆவண கோப்பாக மாற்றி கோப்பின் எண்ணையும் குறிப்பிட வேண்டும். பதிவு எண், பாடக் குறியீடு எண், கையடக்க ஆவண எண் இவற்றைக் குறிப்பிட்டு விடைத்தாட்களை ஏற்கனவே குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு வகையில் தேர்வு முடிந்து 60 வினாடிக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- மாணவர்கள் தங்களது விடைத்தாட்களை நூலால் ஆன உறையில் (A4 அளவு) இணைப்பு-II ல் கேட்கப்பட்டுள்ள விவரங்களோடு ஒட்டி அதனை விரைவு அஞ்சல் / பதிவு அஞ்சல் / தூதஞ்சல் மூலம் அந்தந்த கல்லூரி முதல்வரின் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

- மாணவர்கள் ஒரு வாரம் முழுக்க நடந்த தேர்வுகளின் அசல் விடைத்தாட்களை அந்த குறிப்பிட்ட வார இறுதி நாளில் கல்லூரி முதல்வருக்கு விரைவு அஞ்சல் / பதிவு அஞ்சல் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். இவ்வாறு செய்ய தவறுபவர்கள் தேர்வுக்கு வராதவர்களாக கருதப்படுவார்கள். அசல் விடைத்தாட்களை அனுப்பிய விவரங்களை படமெடுத்து அவற்றைத் தலைமை கண்காணிப்பாளரின் கவனத்திற்கும், பார்வைக்கும் அனுப்ப வேண்டும்.
- கையடக்க ஆவணங்கள் மூலமாக கூகிள் வகுப்பறை / மென் பொருள் குழு / மின்னஞ்சல் அல்லது வேறு ஏதேனும் முறையில் தேர்வு எழுதிய 60 வினாடிக்குள் பதிவேற்றம் செய்த மாணவர்களின் விடைத்தாட்கள் மட்டும் மதிப்பீடு செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கான விடைத்தாட்களை ஒரு நகலுக்கு மேலாக அனுப்பினால் அது தவறான முறை என கருதப்படும். மேலும் மாணவர்களுடைய கையெழுத்தும் இவ்வலுவலகத்தில் இருக்கும் ஏனைய கையெழுத்தும் ஒன்றாக இருக்கிறதா என ஆராயப்பட்டு அவற்றில் ஏதேனும் மாற்றம் இருந்தால் அதை ஆள் மாறாட்டமாகக் கருதப்படும்.
- மாணவர்கள் வீட்டிலிருந்தே எழுதும் தேர்வு முறை என்பதால், அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே தேர்வுகளை எழுத வேண்டும் என்பதோடு அவற்றை பதிவு அஞ்சல் / மின்னஞ்சல் / தூதஞ்சல் வாயிலாக அந்தந்தக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டும். மாணவர்கள் அக்கல்லூரிக்கு நேராக சென்று விடைத்தாட்களை கொடுக்கக் கூடாது.
- மாணவர்கள் அவர்களது வருகைப் பதிவேட்டின் விவரங்களைத் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலக தரவு தளத்தில்

  https://studentservices.annauniv.edu

  மாணவர்களின் புகுபதிகை மூலம் மென் நகல் பதிவேற்றம் செய்த மூன்று முழு நாட்களிலும், அசல் விடைத்தாட்களை அனுப்பிய பத்து நாட்களிலும் பார்த்துக் கொள்ளலாம்.

**<u>தேர்வுகள்</u>**

தேர்வுகள் இரண்டு அமர்வுகளாக நடத்தப்படும் ஒன்று காலையிலும் மற்றொன்று மாலையிலும் நடத்தப்படும். நடத்தப்படும் நேரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| காலை அமர்வு | | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம்** | |
| கல்லூரியிலிருந்து கேள்வித்தாளைப் பெறுவது | 09.00 AM | 09.30 AM |
| தேர்வுக்குரிய நேரம் | 09.30 AM | 12.30 PM |
| விடைத்தாளின் மென் நகல் பதிவேற்றம் | 12.30 AM | 01.30 PM |
| **மதிய அமர்வு** | | |
| கல்லூரியிலிருந்து கேள்வித்தாளைப் பெறுவது | 02.00 PM | 02.30 PM |
| தேர்வுக்குரிய நேரம் | 02.30 PM | 05.30 PM |
| விடைத்தாளின் மென் நகல் பதிவேற்றம் | 05.30 PM | 06.30 PM |

**விடைத்தாளின் உறைப்பக்கம்:**

விடைத்தாளின் முகப்புப்பக்கம் இணைப்பு-I ஆக இருக்க வேண்டும். தேர்வு எழுதும் ஒவ்வொரு மாணவரும் இந்தத் தாளில் அனைத்து விவரங்களையும் ஒவ்வொரு தேர்வுக்கும் எழுத வேண்டும். மேலும் இணைப்பு-I ன் பின்பக்கம் வெறுமனே விட்டு விட வேண்டும்.

**விடைத்தாளை அனுப்புவது குறித்து:**

அசல் விடைத்தாட்களை கல்லூரி முதல்வருக்கு அனுப்பும் போது இணைப்பு-IIல் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைப் பூர்த்தி செய்து அவற்றை துணியால் இழைக்கப்பட்ட உறையில் ஒட்டி கல்லூரி முதல்வரின் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**குறிப்பு: தேர்வு எழுதும் மாணவர்களின் சீரிய கவனத்திற்காக உரைபட விளக்கம் அடுத்தப்பக்கத்தில் தரப்பட்டுள்ளது.**

**அனைத்து மாணவர்களும் மேலே குறிப்பிட்ட அனைத்து அறிவுரைகளையும் தவறாமல் பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.**

# அண்ணா பல்கலைக்கழகம் :: சென்னை - 25

## நவம்பர்/டிசம்பர் 2021 தேர்வுகள்

## தேர்வுகளுக்கான மாணவர்களுக்கான வழிமுறைகள்

**படி 1: தேர்வு நுழைவுச் சீட்டு**

நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் - தேர்வு கட்டுப்பாட்டு அலுவலக தரவுதளம் மாணவர் பிரிவு

↓

**படி 2: எழுதுபொருள் விவரங்கள்:**

துணியால் இழைக்கப்பட்ட உறைகள், நீலம் / கருப்பு மை எழுதுகோல், கரிக்கோல், அழிப்பான், கூர்மையாக்கி அளவு கோல், A4 அளவிலான கோடுகள் இல்லாத வெற்றுத்தாள், வரைபடத்தாள், விளக்கப்படம், ஓவியத் தாள்கள், கட்டிடக்கலை வரைவுக்கான கணக்கிடும் கருவி, இணைப்புகளின் அச்சு மேலும் தேவையான எழுது பொருள்கள் முன்னமே வைத்திருக்க வேண்டும்

↓

**படி 3: கேள்வித்தாள்களை வழங்குவது குறித்து:**

கேள்வித்தாள்கள் கல்லூரிகளால் காலை அமர்வில் 9 மணி முதல் 9.30 வரையிலும் மாலை அமர்வில் 2 மணி முதல் 2.30 மணி வரையிலும் கல்லூரி முதல்வர்களால் கல்லூரி அமைத்துள்ள வழிமுறைகளின் மூலமாகக் வழங்கப்படும்.

↓

**படி 4: தேர்வு எழுதும்போது**

1. இணைப்பு-Iத் தவிர்த்து A4 தாளில் இருபக்கமும் 30 பக்கத்திற்கு மிகாமல் எழுத வேண்டும் (15 தாட்கள்)
2. A4 அளவிலுள்ள வெற்றுத் தாளில் இருபக்கமும் 30 பக்கங்களுக்கு மிகாமல் (15 தாள்கள்)
3. பதிவு எண், மாணவரின் பெயர், பாடக் குறியீட்டு எண், பாடப்பெயர் மற்றுமுள்ள விவரங்கள் விடைத்தாளின் ஒவ்வொரு பக்கமும் மேற்புறம் எழுத வேண்டும்.
4. தேர்வு நடக்கும் நாள், பக்க எண், மாணவரின் கையொப்பம் ஆகியவை விடைத்தாளின் ஒவ்வொரு பக்கமும் கீழ்ப்புறம் எழுத வேண்டும்.

↓

**படி 5: தேர்வுக்குப் பிறகு**

1. முழு வாரமும் எழுதிய விடைத்தாளின் கடின நகலை துணியால் இழையப்பட்ட உறையிலிட்ட விரைவு அஞ்சல், பதிவு அஞ்சல், மின்னஞ்சல் / தூதஞ்சல் வாயிலாக அந்தந்தக் கல்லூரியின் முதல்வருக்கு அனுப்ப வேண்டும்.
2. அசல் விடைத்தாட்களை அனுப்புவதற்கு முன் இணைப்பு-II ல் கேட்கப்பட்டுள்ள தகவல்களைப் பூர்த்தி செய்து அவற்றை துணியால் இழைக்கப்பட்ட உறையில் ஒட்டி கல்லூரி முதல்வரின் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**மாணவர்கள் தங்களுடைய விடைத்தாட்களைக் கொடுப்பதற்கு நேரடியாக கல்லூரிகளுக்கு செல்லக்கூடாது.**

இணைப்பு - I

# ANNA UNIVERSITY
## CHENNAI - 25

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| College Code | | | | | | | | | | | | | |
| College Name | | | | | | | | | | | | | |
| Register Number | | | | | | | | | | | | | |
| Name of the Candidate | | | | | | | | | | | | | |
| Degree | | | | | | | | | | | | | |
| Branch | | | | | Semester | | | | | | | | |
| Question Paper Code | | | | | | | | | | | | | |
| Subject Code | | | | | | | | | | | | | |
| Subject Name | | | | | | | | | | | | | |
| Date | DD | MM | YY | Session | FN | AN | | | | | | | |
| No. of Pages used | | In words | | | | | | | | | | | |
| All particulars given above by me are verified and found to be correct | | | | | | | | | | | | | |
| Signature of the Student with date | | | | | | | | | | | | | |

### For Office Use Only

Instructions to the Candidate: Put Tick mark (✓) for the questions attended in the tick mark column against each question

| PART – A | | | PART – B & C | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Question No. | ✓ | Marks | Question No. | | (i) ✓ | (i) Marks | (ii) ✓ | (ii) Marks | (iii) ✓ | (iii) Marks | Total Marks | Grand Total (in words) |
| 1 | | | 11 | a | | | | | | | | |
| 2 | | | | b | | | | | | | | |
| 3 | | | 12 | a | | | | | | | | |
| 4 | | | | b | | | | | | | | |
| 5 | | | 13 | a | | | | | | | | |
| 6 | | | | b | | | | | | | | |
| 7 | | | 14 | a | | | | | | | | |
| 8 | | | | b | | | | | | | | |
| 9 | | | 15 | a | | | | | | | | |
| 10 | | | | b | | | | | | | | Grand Total |
| | | | 16 | a | | | | | | | | |
| | | | | b | | | | | | | | |
| Total | | | | | | | | | | | | |

Declaration by the Examiner: Verified that all the questions attended by the student are valued and the total is found to be correct

| | | |
|---|---|---|
| Date | Name of the Examiner | Signature of the Examiner |

இணைப்பு - II

# ANNA UNIVERSITY :: CHENNAI – 25
## END-SEMESTER EXAMINATIONS
## NOVEMBER - DECEMBER 2021

| Register Number | Name of the Candidate | Programme | Branch of Study | Semester |
|---|---|---|---|---|
| | | | | |

| Sl. No. | Question Paper Code | | | | | | Subject Code | Date / Session | Sl. No. | Question Paper Code | | | | | | Subject Code | Date / Session |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 5 | | | | | | | | |
| 2 | | | | | | | | | 6 | | | | | | | | |
| 3 | | | | | | | | | 7 | | | | | | | | |
| 4 | | | | | | | | | 8 | | | | | | | | |

**To**

**THE DEAN/ PRINCIPAL**

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

**From**

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................